<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>CC.No.12/2025</u>

<u>25.02.2026</u>

**திரு.பெரியய்யா , த/பெ. பிச்சைராஜ்**

**<u>PW: 23</u>**

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) முதல் விசாரணை விவரங்கள் எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. இந்த வழக்கின் புகார் அனுப்பிய துணை பதிவாளர் திரு. கார்த்திகேயன் என்பவரை மறுவிசாரணை செய்த வாக்குமூலத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரியல்ல. அனுப்பப்பட்டுள்ளதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
எதிரி கவிதாவின் **State Bank of India வங்கி கணக்கு அ.த.சா.ஆ.67** ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது எதிரி உடையது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்கும் போது வழக்கு தொடர்புடைய வங்கி ஆவணங்களை பார்வையிட்டு பிறகு சாட்சிகளை விசாரணை செய்தேனா அல்லது சாட்சிகளை விசாரணை செய்தபிறகு ஆவணத்தை பார்வையிட்டேனா என்றால் சாட்சிகளின் விசாரணையின் போது ஆவணங்களை பார்வையிட்டேன்.

2) சாட்சிகளை எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால் பெரும்பாலானவர்களை எங்களது அலுவலகத்தில் வைத்து விசாரித்தேன். சாட்சிகளை எங்கள் அலுவலகத்திற்கு வரவழைத்தது தொடர்பான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யவில்லை அழைப்பாணை எங்கள் வசம் உள்ளது. அதுபோல் யாரையும் அழைத்து விசாரிக்கவில்லை என்றாலும், பிரிவு 81 விசாரணை அறிக்கையின் சொல்லப்பட்டுள்ள விவரங்களின் படி வாக்குமூலங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3) சங்க ஆவணங்கள் எப்போது சங்கத்திடம் கேட்டு பெறப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யவில்லை அழைப்பாணை எங்கள் வசம் உள்ளது. நாங்கள் விசாரணை செய்வதற்கு முன்பாக எவ்வித ஆவணங்களையும் கேட்டு பெறவில்லை என்றாலும், அதனால் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்களின் அடிப்படையில் தான் விசாரணை செய்துள்ளேன். கூட்டுறவு சங்க சட்டம் பிரிவு 81 விசாரணையின் அடிப்படையில் தான் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் பிரிவு 81 விசாரணை அதிகாரியில் அறிக்கையை தொடர்ந்து துணை பதிவாளர்

பார்வையிட்டு அவரால் அளிக்கப்பட்ட புகாரையும் பெற்று எனது உயர் அதிகாரி மூலம் வரப்பெற்ற எழுத்துப்பூர்வமான உத்தரவு பெற்று பதிவு செய்யப்பட்ட வழக்கில் நான் தொடர்ந்து விசாரணை செய்தேன்.

4) எதிரியிடம் நான் விசாரணை செய்து வாக்குமூலம் ஏதேனும் பதிவு செய்தேனா என்றால் இல்லை. எனக்கு முன்பாக இருந்த அதிகாரி விசாரணை செய்த சாட்சிகளை நான் மீண்டும் மறுவிசாரணை செய்தேனா என்றால் இல்லை. பிரிவு 81 விசாரணை அறிக்கை என்பது விசாரணை செய்த அதிகாரியால் கூட்டுறவு சங்க சட்டத்தில் சொல்லியுள்ளப்படி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள்ள தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். குறிப்பிட்ட காலத்தில் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எப்போது விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது எப்போது அறிக் தாக்கல் செய்யப்பட்டது என்றால் துணை பதிவாளர் திருவாரூர் அவர்களின் செயல் முறை ஆணை ந.க.2342/2018/நா.வி.1 நாள் 10.05.2019 .

5) அந்த விசாரணையை மூன்று மாத காலத்திற்குள் முடிக்கப்படவேண்டும். இவ்வழக்கில் முறையாக துணை பதிவாளர் அவர்களிடம் நாள் 03.08.2019 ல் விண்ணப்பித்து கால நீட்டிப்பு பெறப்பட்டுள்ளது. அந்த வகையில் 02.11.2019 ல் விசாரணை முடித்திருக்க வேண்டும். அதன் பிறகு 10 நாட்கள் கால அவகாசம் எடுத்து அறிக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரிதான். அதன்படி இவ்வழக்கில் 09.11.2019 ல் விசாரணை முடித்துள்ளார். அறிக்கை அதிகாரியிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியவில்லை. குறிப்பிட்ட காலத்தில் அறிக்கையை தாக்கல் செய்யாமல் 7 ½ மாதங்களுக்கு பிறகு 20.06.2020 ல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது.

6) உரிய காலத்தில் தாக்கல் செய்யப்படாத பிரிவு 81 அறிக்கை சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள விசாரணை அறிக்கை சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கூட்டுறவு சங்க ஆவணங்களையும் பிரிவு 81 விசாரணை அறிக்கையையும் சட்டத்திற்கு உட்பட்ட நான் ஆய்வு செய்யாமல் தவறாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முறையாக ஆவணங்களை பரிசீலனை செய்து தான் சாட்சிகளை விசாரணை செய்தும் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

7) எதன் அடிப்படையில் பிரிவு 81 விசாரணை தொடங்கப்பட்டது என்றால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சங்கத்தில் கொடுத்த புகாரின் பேரில் பிரிவு 81 விசாரணை தொடங்கப்பட்டது என்று அறிந்து கொண்டேன். பாதிக்கப்பட்ட நபர்கள் கொடுத்த புகார் ஏதேனும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் என்றால் எங்களிடம் நேரடியாக

புகார் ஏதும் கொடுக்கவில்லை. சங்கத்தில் கொடுத்த புகாரின் பேரில் பிரிவு 81 விசாரணை தொடங்கப்பட்டது.

8) யார் புகார் கொடுத்தார்கள் என்று கேட்டு அந்த புகாரை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. யார் கொடுத்தார்கள் என்பதை தெரிந்து கொண்டு அவர்களிடம் வாக்குமூலம் ஏதேனும் பதிவு செய்துள்ளேன் என்றால் பதிவுசெய்துள்ளேன். பாதிக்கப்பட்டுள்ள நபர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் குறிப்பிடும் பாதிக்கப்பட்ட நபர்கள் யாரேனும் புகார் கொடுத்தாக சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. நான் முறையாக விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல.

9) ஆசிரியர் கூட்டுறவு சிக்கன சங்கத்தில் எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதை பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. அது புலன் விசாரணைக்கும் சம்பந்தம் இல்லை. பிரிவு 81 விசாரணை அதிகாரி விசாரணை செய்த சாட்சிகளை தான் நானும் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல, கூடுதலாக சாட்சிகளை விசாரணை செய்துள்ளேன். கூடுதலாக வங்கி மேலாளர்கள் மூன்று பேரையும் , மேலும் சாட்சிகளையும் விசாரணை செய்துள்ளேன்.

10) நான் கூடுதலாக விசாரித்த சாட்சிகளை ஏன் பிரிவு 81 விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை என்பதை அவரிடம் விசாரித்தேனா என்றால் விசாரித்துள்ளேன். மேற்சொன்ன கேள்விக்கான விளக்கத்தை வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மேலும் கூடுதலாக விசாரித்த சாட்சிகள் யார்யார் என்றால் துணை பதிவாளர் திரு. கார்த்திகேயன், திரு. விஜயகுமார், திருமதி. ஜெயந்தி ஆகியோர்களையும் விசாரித்துள்ளேன். இவ்வழக்கின் புகார் ஆன துணை பதிவாளர் திரு. கார்த்திகேயன் இந்த சங்கத்தின் உறுப்பினரோ, பாதிக்கப்பட்டவரோ இல்லை என்றால் சரிதான். திரு. விஜயகுமார் பாதிக்கப்பட்ட ஆசிரியர். திருமதி. ஜெயந்தி நிர்வாக குழு தலைவர் ஆவார்.

11) மோசடி நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் நிர்வாக குழு இருந்ததா என தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நிர்வாக குழு இருந்தது. நிர்வாக குழுவில் எத்தனை உறுப்பினர்கள் இருந்தார்கள் என்றால் அது புலன் விசாரணைக்கு சம்பந்தம் இல்லை. அவர்கள் அனைவரிடமும் வாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. நிர்வாக குழுவின் கீழ் தான் சங்கம் இயங்க வேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சங்க நடவடிக்கை அனைத்திற்கும் செயலாளர் தான் முழு பொறுப்பாவார்.

12) நிர்வாக குழு இயற்றுகிற தீர்மானத்தின் படி சங்கம் இயங்க வேண்டும் என்றால் சரிதான். தனிப்பட்ட கையாடல் மற்றும் பொய் ஆவணம் தயாரித்தல் போன்றவற்றிற்கு

நிர்வாகம் பொறுப்பாகாது. பொதுவாக சங்கத்தில் மூன்று மாதத்திற்கு தணிக்கையும், ஆறு மாதத்திற்கு தணிக்கையும், ஆண்டுக்கு ஒருமுறை தணிக்கையும் செய்யப்படும் விவரம் எனக்கு தெரியும். அது கூட்டுறவு சங்க நடைமுறை ஆகும். மோசடி நடைப்பெற்றதாக சொல்லப்படும் காலங்கட்டங்களில் தணிக்கை அறிக்கைகளை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. பாதிக்கப்பட்டவர்களின் புகாரின் பேரிலே விசாரணை தொடங்கப்பட்டது.

13) சங்க கணக்கை தணிக்கை செய்த அதிகாரிகளை நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. ஆவணங்களிலிருந்தே முறைகேடு தெரியவந்ததால் விசாரிக்கவில்லை. குற்ற இறுதி அறிக்கையில் எத்தனை இனங்களாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் 2 இனங்களாக பிரிக்கப்பட்டு 1 இனத்தில் உட்பிரிவுகளாக 15 இனங்கள் குறிப்பிட்டும், 2 வது இனத்தில் 3 இனங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது.

14) முதல் இனம் என்பது உறுப்பினர்களிடமிருந்து தொகை பெற்றுக்கொண்டு சங்க கணக்கில் வரவு வைக்காமல் உள்ளது என்றால் வரவு வைக்காமல் சம்பந்தப்பட்ட நபரிடம் பணம் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சீட்டு தனிச்சையாக வழங்கியும் அதற்கு ஆவணங்களுக்கும் தொடர்பு இல்லாமல் இருப்பது குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க உறுப்பினர்களிடமிருந்து எதிரி பணம் பெற்றுக்கொண்டதற்கான வாய்மொழி சாட்சியம் மட்டும் தான் உள்ளது என்றாலும், ஆவண சாட்சியம் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல.

15) எதிரி சங்க உறுப்பினர்களிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டதற்கான நீதிமன்ற ஆவணங்கள் எது என்றால் அ.த.சா.ஆ 28 போன்ற ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இது சங்க ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். அது எதிரி தனிச்சையாக இதுபோன்ற நிறைய ஆவணங்கள் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல என்றால் சரியல்ல. 2 வது இன குற்றச்சாட்டில் உறுப்பினர்களிடமிருந்து தொகையை பெற்றுக்கொண்டதாகவும் கால தாமதமாகவும் தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது குறித்தும், சொல்லப்பட்டுள்ள நிலையில் எப்போது தொகை பெறப்பட்டது ஆதார ஆவணங்களோ அல்லது எந்த தேதியில் வரவு வைக்கப்பட்டுள்ளதற்கான ஆவணங்களோ இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

16) 3 வது இனமாக குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டில் ஆவணங்களில் அடித்துதிருத்தி எழுதப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. காலதாமதாக வரவு வைக்கப்பட்டுள்ளது என்ற 2 வது குற்றச்சாட்டு மட்டும் தான் உள்ளது. ஆவணங்களில் அடித்துதிருத்தி எழுதப்பட்டுள்ளது என்று குற்றச்சாட்டுகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். மோசடி நடைப்பெற்றதாக சொல்லும் காலங்களில் எத்தனை பேர் கூட்டுறவு சங்கத்தில் பணியில் இருந்ததை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். அப்போது ஆஜர் எதிரி மட்டும் பணியில் இருந்தார்.

17) மோசடி காலங்களில் எழுதப்பப்பட்ட பதிவேடுகளில் கையெழுத்துகள் ஒரே மாதிரியாக உள்ளது என்பது குறித்து ஆய்வு செய்தேனா என்றால் இல்லை. புலன் விசாரணையில் சந்தேகமான கையெழுத்து மாறுபாடுகள் ஏதும் இல்லை. ஆஜர் எதிரியின் கையெழுத்து தான் சந்தேகத்துக்கு இடமின்றி தெரிந்து கொண்டதால் கையெழுத்து ஒப்பீடு குறித்து ஆய்வுக்கு அனுப்ப அவசியம் ஏற்படவில்லை. மோசடி நடைப்பெற்றதாக சொல்லப்படும் காலங்களிலும், நான் விசாரணை செய்த காலங்களிலும் 2 நபர்கள் பணியில் இருந்தார்கள் என்றாலும் நான் முறையாக விசாரணை செய்ததால் எதிரி மட்டும் பணியில் இருந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

18) நான் விசாரித்த சாட்சிகள் ஒவ்வொருவருக்கும் மாதத்தவணை எவ்வளவு என்பது குறித்து நான் பதிவு செய்த சாட்சிய வாக்குமூலங்களில் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. கடன் பெற்று தொகையையும் மற்றும் திருப்பி செலுத்தியுள்ள தொகையையும் பதிவு செய்துள்ளேன். கடன் பெற்றவர்கள் அவர்கள் சம்பளத்தில் தொகை ஏன் பிடிக்கவில்லை என்பது குறித்தோ, மொத்தமாக ஏன் செலுத்தியுள்ளார்கள் என்பது குறித்தோ விசாரித்துள்ளேனா என்றால் விசாரித்துள்ளேன். பணி மாறுதல் பெற்று செல்லும் கடன் தொகை மொத்ததையும் செலுத்திவிட்டு தொகை ஏதும் மீதம் இல்லை என்று சான்று பெற்று வேறு மாவட்டத்திற்கு செல்ல வேண்டிய காரணத்தால் மொத்தமாக செலுத்தப்பட்டுள்ளது. மேற்சொன்ன வகையில் நான் விசாரித்த சாட்சிகளில் பணி மாறுதல் பெற்று சென்ற உத்தரவு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சாட்சி விசாரிக்கப்பட்டுள்ளது.

19) சாட்சிகள் வேறு மாவட்டத்திற்கு பணி மாறுதல் பெற்று சென்றதை உறுதிப்படுத்த மேல் அதிகாரிகள் யாரேனும் விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. அது புலன் விசாரணைக்கு அவசியம் ஏற்படவில்லை. சங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டதாக பிரிவு 81 விசாரணை அதிகாரி சொல்லியுள்ள தொகையும், நான் சொல்லியுள்ள தொகையும் ஒன்றாக உள்ளது என்றால் சரிதான். ஆவணங்களை நான் ஆய்வு செய்யமால் பிரிவு 81 விசாரணை அதிகாரியின் அறிக்கையை பின்பற்றி தொகையை நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தனித்தனியாக இழப்புகள் விவரத்தை குறிப்பிட்டுள்ளேன்.

20) சங்கத்தில் ஏற்பட்ட இழப்புகளை மீட்டு எடுக்க கூட்டுறவுத்துறை அதிகாரிகள் என்ன நடவடிக்கை மேற்கொண்டார்கள் என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். அந்த தொகைக்கும் குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள தொகைக்கும் வேறுபாடு உள்ளது என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். அந்த சர்சார்ஜ் நடவடிக்கை என்பது கூட்டுறவு சங்க நடைமுறை நடவடிக்கை ஆகும்.

21) கூட்டுறவு சங்கத்தினுடைய இழப்பு யாரால் ஏற்படுத்தப்பட்டது எவ்வாறு ஏற்படுத்தப்பட்டது என்பது குறித்த குற்ற விசாரணை எங்களுடையதாகும். அந்த இழப்பையும் யாரிடமிருந்து பெறுவது என்பது தொடர்பான அறிக்கை தான் சர்சார்ஜ் நடவடிக்கை என்றால் சரிதான். அதற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை. குற்ற செயலில் ஈடுப்பட்டவர்களை தப்பிக்க வைப்பதற்காக சர்சார்ஜ் நடவடிக்கைக்கும் குற்ற நடவடிக்கைக்கும் சம்பந்தம் இல்லை என் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றாலும் எதிரி மீது தவறாக குறிப்பிடப்பட்ட பிரிவு 81 விசாரணை அறிக்கையை பின்பற்றி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமலும், ஆவணங்களை முறையாக ஆய்வு செய்யாமலும், எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கில் தவறாக குற்றப்பத்தரிக்கை தாக்கல் செய்து தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.02.25 13:43:49 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்